Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆடி 06 | 21 - 07 - 1992 | செவ்வாய்க்கிழமை | ஓசை 154

## அத்துமீறி புகுந்தவரை அவுஸ். வெளியேற்ற முடிவு

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவில் குடியேறியவர்களை கைது செய்யப் போவதாக அவுஸ்திரேலிய அதிகாரிகள் கூறியுள்ளனர். இதற்கான புதிய சட்டங்களை தொழிற்கட்சி அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. விசா முடிவடைந்த பின்னரும் அவுஸ்திரேலியாவில் சட்டவிரோதமாக தங்கி இருக்கும் எவரையும் கைது செய்யமுடியும் என்பதே இதன் பொருளாகும் என்றும், அடுத்த மாதம் இப்புதிய சட்டங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன என்றும், 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் முடிவடைந்த 12 மாத காலத்தில் விசா முடிவடைந்த 81,5000பேர் அவுஸ்திரேலியாவில் தங்கியிருந்ததாக ம் அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# தலைவர் பிரபாகரனின் படத்தை ஏந்தியவாறு
# சென்னையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

## புலிகள் மீதான தடையை நீக்குமாறு 20 அமைப்புக்கள் கோரிக்கை

(சென்னை)

விடுதலைப் புலிகள் மீதான தடை உத்தரவை ரத்துச் செய்யக் கோரியும் இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்துமாறு இந்திய மத்திய அரசைக் கோரியும் நேற்று சென்னையிலுள்ள சிறிலங்கா தூதுவராலயத்தின் முன் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. பாட்டாளி மக்கள் கட்சியின் தலைமையில் இருபது அமைப்புக்கள் இவ் ஆர்ப்டாட்டத்தில் கலந்து கொண்டன. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கோசங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர் தலைவர் பிரபாகரனின் படங்களையும் தாங்கியிருந்தனர்.

இந்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்குத் தடை விதித்ததன் பின்னர் தமிழ்நாட்டில் புலிகளுக்கு ஆதரவாக நடைபெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டம் இதுவாகும்.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைமையில் இந்தக் கட்சிகள் சென்னையிலுள்ள சிறிலங்காவின் உயர் ஸ்தானிகர் காரியாலயத்துக்கு ஊர்வலமாகச் சென்று சிறிலங்காப் படையினர் இலங்கைத்தமிழர்களுக்கெதிராகப் போர் நடத்திவருவதால் இந்தியா சிறிலங்காவுடன் ராஜதந்திர உறவுகளை துண்டித்துவிடவேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ், தமிழ்தேசிய இயக்கத்தின் தலைவர் பி. நெடுமாறன், அகில இந்திய எம். ஜி. ஆர் அண்ணா தி. மு. க. வின் பொதுச் செயலாளர் எஸ். திருநாவுக்கரசு, முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகள் மீதான தடை உத்தரவை ரத்துச் செய்து, இந்தியாவிலுள்ள சிறிலங்கா அரசின் எல்லா அமைப்புகளையும் மூடும்படி ஆர்ப்பாட்டக்காரர் இந்திய அரசை வற்புறுத்தினர்.

ஊர்வலத்தில் சென்றவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படத்தைத் தாங்கிச் சென்றனர்.

சிறிலங்கா துணை ஸ்தானிகராலயத்திற்கு முன்னால் உரை நிகழ்த்திய டாக்டர் எஸ். ராம்தாஸ், தமிழீழ மக்களின் விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளைத் தடை செய்யப் பிரதமர் நரசிம்மராவ் தவறான முடிவை எடுத்ததாக தெரிவித்தார். இதேபோன்ற ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் தமிழ்நாட்டின் ஒவ்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## நெருப்பு மழை இன்று வெளியீடு

(நமது நிருபர்)

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதனின் ''நெருப்பு மழை'' என்னும் கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 4 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தளபதி செல்வராசா மங்கள விளக்கேற்றிவைப்பார். தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் இளங்குமரன் வெளியீட்டுரை நிகழ்த்துவர்.

நிதர்சனப் பொறுப்பாளர் பரதன் முதற் பிரதியை பெறுவார். ஆய்வுரைகள்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பாகிஸ்தான் மறுப்பு

விடுதலைப்புலிகளின் தலைவர்களில் ஒருவரான கிருஷ்ணகுமார் எனப்படும் கிட்டு ஆயுதம் வாங்குவதற்கு

(3ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் முரளி நினைவு நாள் புதிர்ப் போட்டி

மாவட்ட மட்டத்திலான மேஜர் முரளி நினைவு நாள் புதிர்ப் போட்டி நேற்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

கோட்ட மட்டத்தில் நடைபெற்ற புதிர்ப் போட்டியில் வெற்றி பெற்ற 19 பாடசாலைக் குழுக்களுக்கிடையே இப்போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் கலந்து கொண்ட பாடசாலைக் குழுக்களில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்குழுவும், யாழ் சென்ஜோனஸ் கல்லூரியும் முதலாம் பரிசை இணையாகப் பெற்றுக் கொண்டன.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ரூபாவின் மதிப்பு மேலும் வீழ்ச்சியடையுமாம்

ரூபாவின் மதிப்பு மேலும் 8 தொடக்கம் 9 சத வீதம் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனைய பசீர் நிருத்தங்களுடன் ரூபாவும் மதிப்பிறக்கம் செய்யப்பட வேண்டும் என உலக வங்கி கோரியுள்ளது.

1991 இல் ரூபாவின் மதிப்பு அமெரிக்க டாலருடன் ஒப்பிடுகையில் 5.9 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

1991 சம காலத்துடன் ஒப்பிடுகையில் 1992 தை தொடக்கம் பங்குனி வரையிலான

(3 ஆம் பக்கம் பார்க்க)

# படையில் சேரும் சிங்கள இளைஞர்கள்
# வடக்கு போர் முனைக்கு செல்ல அச்சம்

வதால் இந்தியா சிறிலங்கா வுடன் ராஜதந்திர உறவுகளை துண்டித்துவிடவேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டம் செய்த னர்.

பாட்டாளி மக்கள் கட்சி ... அமைப்புகளையும் மூடும்படி ஆர்ப்பாட்டக்காரர் இந்திய அரசை வற்புறுத்தினர்.

ஊர்வலத்தில் சென்றவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்

# வடக்கு போர் முனைக்கு செல்ல அச்சம்

## இடிந்துவரும் இராணுவ மனவுறுதிபற்றி பிரபல சிங்கள அரசியல் விமர்சகர்

(கொழும்பு)

சமீப காலத்தில் சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர்ந்து கொள்ள முன்வரினும், அவர்கள் வடக்கில் புலிகளுக்கு எதிரான போரில் பங்குபற்ற அஞ்சுகின்றனர். கொழும்பில், அல்லது தென்னிலங்கையில் கடமை செய்யத்தான் விரும்புகின்றனர். இவ்வாறு தெரிவிக்கின்றார் பிரபல சிங்கள அரசியல் விமர்சகரான கௌடில்யா.

'ஐலண்ட்' வார இதழில் அவர் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் புலிகளின் மனவுறுதி, கட்டுப்பாடு என்பவற்றை சிங்கள இராணுவம் ஒருபோதும் எட்ட முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் சமீபகாலங்களில சிங்கள இளைஞர்கள் அதிகமாகச் சேர்ந்து கொள்கிறார்கள் என்பது உண்மைதான். ஊக்குவிப்புத்தான் இதற்கான காரணமாகும். கொழும்பு காலிமுக இராணுவ தலைமைக் காரியாலயத்துக்கு முன்னால் காலி வீதியில சிங்கள இளைஞரின் வரிசை ஒன்று காணப்பட்டது. அவர்கள் ஏதோ பெருமைக்காக இராணுவத்தில் சேர நேர்முகத் தேர்வுக்கு அங்கு கூடி நிற்கவில்லை. நிரந்தரமான தொழில் வாய்ப்பையும், வருமானத்தையும் தேடி அங்கு வந்துள்ளார்கள். ஆனால் சிங்கள இளைஞரின் ஊக்கம் புலிகளின் கடைசி ஆயுதமான சைனைட் குப்பியைத் தாண்டிவிடாது என்று குறிப்பிடுகிறார்.

4,000 சிப்பாய்கள் இராணுவத்தை விட்டு ஓடிவிட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டு, மீண்டும் அவர்களை இராணுவத்தில் சேரும்படி கேட்டுள்ளார்கள். அப்படி ஒரு கவர்ச்சியான சலுகையை வழங்குவதற்கு நாட்டில்மனித வலுவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதா, என்ன? என்று

(3 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணம் இடைக்காது தீவக மக்கள் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த தீவக மக்கள் நேற்றுத் தங்கள் தங்கள் கிளைகளுக்கு நிவாரணம் பெறச்சென்று ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்து முகாமில் தங்கியிராத குடும்பங்களுக்கு ஜூலை மாதத்திற்கான இருவார நிவாரணம் திங்கட்கிழமை முதல் அவரவர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் கிளைகளில் உலர்உணவு அட்டை இன்றி வழங்கப்படுமென யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பிரிவு அறிவித்தது. இதனைத் தொடர்ந்து மேற்படி மக்கள் அவரவர் கிளைகளுக்குச் சென்று கேட்ட

(3ஆம் பக்கம் பார்க்க)

## செப்டெம்பர் 30க்குப் பின் ராணுவ தாக்குதல் நிறுத்தம்?

(கொழும்பு)

செப்டெம்பர் 30ஆம் திகதிக்கு பின்னர் இராணுவ நடவடிக்கை அனைத்தும் நிறுத்தப்படலாமென ஐலன்ட் வார இதழின் பத்தி எழுத்தாளர் சாமிந்தர பெர்னன்டோ குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில், புலிகளுக்கு எதிரான போரில் குறிப்பிடத்தக்க வெற்றி எதுவும் இராணுவ தரப்பில் ஈட்டப்படாவிடினும் இது நிகழும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவிற்கு நிதிவழங்கும் நாடுகள் பொறுமை இழந்துவிட்டன

-பேராசிரியர் மார்சல் சிங்கர்

(லண்டன்)

சிறிலங்கா அரசினால் பெருந்தொகையான பணம் அவ்வப்போது வறட்சி நிவாரணமாக வழங்கப்படுகிறது. உள்நாட்டு யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள பாதுகாப்புச் செலவு மற்றும் யுத்தத்துடன் சம்பந்தப்பட்ட வேறு செலவுகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஒன்று உருவாகியுள்ளது. இதனால் சிறிலங்கா அரசு எதிர்பார்த்ததைவிட மட்டுப்படுத்த முடியாத அளவுக்குச் செலவினங்கள் அதிகரித்துள்ளன என்று லண்டன் எக்களாமிக்ஸ் இதழ் சிறிலங்கா பற்றி மேற்கொண்ட விசேட ஆய்வொன்று குறிப்பிடுகிறது.

சிறிலங்கா அரசு நிதி நெருக்கடியைச் சமாளிப்பதினால்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு



வீரவேங்கை மணிமுடி

18-7-92 அன்று இயக்கச்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை மணிமுடி (சூட்டி) தனபாலசிங்கம் தெய்வீகநாதன், அல்லாரை தெற்கு, அல்லாரை) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## யுத்தத்தில்தொடர்ந்து உதவுவதாயின் விமானங்கள் வாங்க வேண்டும்

### -விமானப்படைத் தளபதி வற்புறுத்து

யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதாயின் எட்டு விமானங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும் என சிறிலங்கா விமானப்படைத்தளபதி ஏயார் மார்ஷல் டெரன்ஸ் குணதிலக்கா அரசாங்கத்தை கேட்டுள்ளார்.

வை-8 விமானத்தின் இழப்பை ஈடுசெய்வதற்கு தற்போது இராணுவ உலகில் பிரபல்யம் பெற்ற ''சாலி-130'' வர்க்க சரக்கு விமானங்கள் இரண்டையும் ஆறு சியாமார்ஷெட்டி குண்டு வீச்சு விமானங்கள் கொள்வனவு செய்யும்படி அவர் அரசாங்கத்திற்கு சிபார்சு செய்துள்ளார்.

இவர் பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ள இரகசிய அறிக்கை ஒன்றில், இவற்றை உடனடியாக கொள்வனவு செய்யாவிட்டால் எதிர்கால யுத்த நடவடிக்கைகளுக்குதம்மால் உதவ முடியாமல் இருக்கும் என தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது.

''சாலி-130'' வர்க்க சரக்கு விமானம் ஒன்றின் இன்றைய

(3 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல

# கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட காரணம் குறித்து விளக்கம்

(கொழும்பு)

நான் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்காக அல்ல. பதிலுக்கு காமினி திசநாயக்கா மற்றும் அத்துலத் முதலி ஆகியோருடன் எனக்கு தொடர்பிருப்பதாக உயர் பொலிஸ் அதிகாரிகள் மூலம் ஜனாதிபதிக்கு தகவல் அனுப்பப்பட்டதாலேயே என்று தலைமறைவாகி இருக்கும் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாச உடுகம்பொல தெரிவித்தார்.

அண்மையில் செய்திப் பத்திரிகை நிருபர்கள் சிலரை தமது தங்குமிடத்திற்கு அழைத்த அவர் மேலும் கூறுகையில் உயர் மட்டத்திலிருந்து வந்த உத்தரவின்படியே நான் கட்டாய ஓய்வுக்கு உட்பட்டேன். கட்டாய ஓய்வு பெறுவதற்கு சில நாட்கள் முன்பாக பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் சிலர் என்னை அழைத்து கட்டாய ஓய்வில் போகும்படி ஆலோசனை கூறினார். அதன் மூலமாக எனது ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளவும் அமெரிக்காவிலுள்ள

(3 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார் தீவிலிருந்து ரெலோவை வெளியேற்றுக

### முஸ்லிம்கள் கோரிக்கை

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம் மத விவகாரங்களில் ரெலோ குழுவினர் தலையிடுவதால் அவர்களை இங்கிருந்து வெளியேற்ற வேண்டுமென முஸ்லிம் அமைப்பின் தேசிய கவுன்சில் கோரியுள்ளது. அத்துடன் மன்னார் தீவுக்குள் முஸ்லிம் அகதிகளே பெரும்பாலும் நலன்புரி நிலையங்களில இருப்பதால் முஸ்லிம் ஒருவரையே மன்னா... ட்ட அரசாங்க அ... மிக்க வேண்டுமெ... கவுன்சில் மே... ளது.

## வரி விளம்பரம்

**பாலர் ஆசிரியர் பயிற்சி**

பாலர் ஆசிரியர் பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது க. பொ. த. (சா/த) கடைசித் தகைமையாகும். நேரில் வர முடியாதோர் தபால்வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம் மே/பா உயர்கலைக்கல்லூரி, 73, பருத்தித்துறைவீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (2845)

**உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள்**

பாவித்த தரமான மணிக்கூடுகள், றேடியோக்கள் வாங்கப்படும். விற்கப்படும். உதிரிப் பாகங்களுக்கான மணிக்கூடுகள் றேடியோக்கள் வாங்கப்படும். மணிக்கூடுகள், றேடியோ ரீவி, டெக் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். எமது புதிய முகவரி 'டில்கா வாச் வேக்ஸ்' (வானவில் கூல்பார் அருகாமை) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (2825)

## 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

வீரஜனனம் 16 - 11 - 69



வீரச்சாவு 21 - 07 - 91

**மேஜர் சேரன்**
(சண்முகம் றோய் செழியன்)

நெஞ்சிருக்கும் வரை உம் நினைவிருக்கும்
உலகிருக்கும் வரை உம் புகழ் நிலைக்கும்

இத்தியடிப்பிள்ளையார் கோவில் வீதி,
சங்கத்தானை, சின்னராசா
சாவகச்சேரி. குடும்பத்தினர்
(2858)

# நினைவு கூருகின்றோம்...
# 1992 - 07 - 21

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை - மூதூர்ப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 22 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு காரைநகரில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். மாமா / பாலையா** [சுப்பிரமணியம் பாலேந்திரம் - காட்டுப்புலம், தொண்டமானாறு]

திருக்கோணமலையில் சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட 3 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பிறவுண் வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன், மாவிட்டபுரத்தில் தேச விரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட ஊரெழுவைச் சேர்ந்த சிற்றூர்திச் சாரதியான தமிழ்ப் பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு மன்னார் / திருக்கேதீஸ்வரம், பாப்பாமோட்டைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப் பிரிந்த -

**சரத்பாபு** [சபாரத்தினம் சிவகுமார் (சிறி)-10- பெரிய தம்பனை, மடுக்கோவில், மன்னார்]

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு ஆணையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின்போது அப்பகுதி இராணுவத்தினருக்குத் துணையாக வெற்றிலைக்கேணியில் கடல் வழியாகத் தரையிறக்கப்பட்டு முள்ளியானில் நிலை கொண்டிருந்து புல்லாவெளிச் சந்தி வரை முன்னேறிய சிறிலங்கா இராணுவ தொடர் சங்கிலி மீது மேற்கொள்ளப்பட்ட 'தகர்த்தெறிந்து நுழைதல்' தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**மேஜர் சிவசங்கர்** [ஜோசப் ஜெயமணி - கோதண்டர் நொச்சிக்குளம், வவுனியா]

**மேஜர் கோணேஸ்** [மார்க்கண்டு தாமோதரம்பிள்ளை - புத்தூர் மேற்கு, யாழ்ப்பாணம்]

**மேஜர் சேரன்** [சண்முகம் றோய் செழியன்- றாகம கொழும்பு]

**கப்டன் தாசன்** [பாலசுந்தரம் முரளிதரன் - தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு]

**லெப். இளஞ்செழியன் / வாஞ்சி** (மு. வே. யோகேஸ்வரன் அரவிந்தன் - மயிலியதனை, தொண்டமானாறு மேற்கு, வல்வெட்டித்துறை, யாழ்.)

**கப்டன் பில்லா** [கிருஸ்ணபிள்ளை சிவஞானம் - உடுத்துறை, தாளையடி, யாழ்.]

**கப்டன் விஷ்ணு** [யோசப் செல்லையா தியாகு - செட்டிக்குளம் வீதி, பெரியகட்டு, வவுனியா]

**லெப். யோகன்** [கிட்னர் உதயகுமார் - 7-ம் வட்டாரம், பெரியபுல்லுமலை, மட்டக்களப்பு]

**லெப். கருணா** [நடராசா குகேந்திரன் - வெடிவைத்தகல்லு, நெடுங்கேணி, மணலாறு]

**லெப். இக்பால்** [நாகலிங்கம் கிருஸ்ணகுமார்-காந்தி நகர், திருக்கோணமலை]

**லெப். வாசன்** [சிங்கராசா பிலிப் நிக்சன்(குயின்ரன்) 14-ஏ, மத்திய மேற்கு வீதி, யாழ்ப்பாணம்]

**லெப். நளன்** [சச்சிதானந்தன் நிர்மலன் - பாண்டிருப்பு, கல்முனை, அம்பாறை]

**லெப. குணா** [வன்னியசிங்கம் புஸ்பராசா - 7-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு]

**லெப். காண்டி** (கனகரத்தினம் கனகேஸ்வரன்-688 கொத்தம்பியா குளம், மல்லாவி, மாங்குளம், முல்லைத்தீவு)

**2-ம் லெப். கந்தன்** (பாலசிங்கம் ரமேஸ் - 3-ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை, யாழ்.)

**2-ம் லெப். தேவா** (அற்புதநாதன் குகதாஸ் - குப்பிளான், ஏழாலை, யாழ்ப்பாணம்)

**2-ம் லெப். எடிசன்** (முருகு குமார் - 3-ம் வட்டாரம், சாம்பல்தீவு, திருக்கோணமலை)

**2-ம் லெப். குயிலன்** (துரைராசா ரசீகரன் - கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை, யாழ்.)

**கபூர்** (தங்கவேல் நடேசன் - 15-ம் கட்டை, பாரதிபுரம், கிளிநொச்சி)

**கப்டன் அகிலன்** (பொன்னுத்துரை மோகனசிறி - நாவற்குழி தெற்கு, கைதடி, யாழ்.)

**வரன்** [சரவணமுத்து ரவிச்சந்திரன் இல.42, மானிப்பாய் வீதி, யாழ்.)

**சிவா** (சிவராசா ஜெகதீஸ்வரன் - பொற்கலந்தம்பை, தெல்லிப்பளை, யாழ்.)

**சுடரோன்** (நடராசா ஜெகதீஸ்வரன் - நகுலேஸ்வரா வீதி, கருகம்பனை, கீரிமலை, யாழ்.)

**ஆனந்** (கிருஸ்ணபிள்ளை தவராசா - கரவெட்டி கிழக்கு, யாழ்.)

**பிலிப்ஸ்** (செபஸ்ரியன் றொக்சன் - 6/7, தொடர்மாடி, குருநகர், யாழ்.)

**இல்பேட்** (யோசப் ஜொனி அன்புவழிபுரம், திருக்கோணமலை)

**ஆனந்தன்** (நேசா அமலதாஸ் - 26, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்)

**முரளி** (மகாலிங்கம் தவக்குமார் - 5-ம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு, யாழ் )

**அன்புதாஸ்** (மாணிக்கம் துஸ்யந்தன் - கண்ணகிபுரம், உவர்மலை, திருக்கோணமலை)

**கிசோ/குசோக்** (தியாகராசா கிருபாகரன் - தெல்லிப்பழை, யாழ்.)

**டொமினிக்** (அருள் ஆனந்தராசா - திருவையாறு, கிளிநொச்சி)

**ரசித்தன்** (வெற்றிவேல் வரதராசா - கொல்லன் கலட்டி, தெல்லிப்பளை, யாழ்.)

**அருள்ராஜ்** (கந்தசாமி கலையமுதன்-5-ம்வாய்க்கால், பன்குளம், திருக்கோணமலை)

**லோலோ** (தில்லைநாதன் முரளிதரன் - குரக்கன்புலம், புன்னாலைக்கட்டுவன், யாழ்.)

**முரளி** (இராசதுரை தர்மசீலன்-சுளிபுரம்மேற்கு, யாழ்.)

**பில்லா** (குருகன் முத்தையா நந்தபாலன் - செல்வபுரம், உரும்பராய் தெற்கு, யாழ்.)

**கபிலன்** (மார்க்கண்டு குகமூர்த்தி - நவாலி தெற்கு, மானிப்பாய், யாழ்.)

**நசார்** (பியதாச ரவி - மன்னார் வீதி, செட்டிக்குளம், வவுனியா)

**ரவி** (கனசபை ரவீந்திரன் - புத்தூர் கிழக்கு, யாழ்.)

**அன்ரனி** (வல்லிபுரம் பிரதாபன் - புதிய செம்மணி வீதி, ஆனந்தபுரம், கல்வியங்காடு, யாழ்.)

**சந்திரநாயகி** (சிவமலர் வடிவேலு - கிளாலி, எழுதுமட்டுவாள், சாவகச்சேரி, யாழ்.)

**2-ம்லெப்நிர்மல்** (பீற்றர் ராஜ்குமார் - செல்வநாயகபுரம், திருக்கோணமலை)

**நளினி** (மேகலா [கோமதி] இரத்தினராசா - 43-பி, ஜெயந்திநகர், கிளிநொச்சி)

**ராஜபாரதி** (நாகலிங்கம் சிறிதவானந்தன் - ஆயித்தியமலை, மட்டக்களப்பு)

**அலெக்ஸ்** (முருகையா சந்திரகாந்தன் - சுகந்திபுரம், புதுக்குடியிருப்பு)

**சந்திரா** (மல்லிகா பொன்ராசா - மகிழம்பைக்குளம், வவுனியா)

**ஆரமுது** (விஜயகுமாரி தங்கவேல் - விளாவெட்டுவான், மட்டக்களப்பு)

**நிசாந்தன்** (ராசதுரை நந்தகுமார் - சிவன் வீதி, உரும்பராய் கிழக்கு, யாழ்.)

**சிவானி** (றோகினி சண்முகநாதன் - பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்.)

மட்டக்களப்பு - தாண்டவன் வெளிப்பகுதியில் எதிர்பாராதவிதமாக பொறி வெடியில் சிக்கியதில் எம்மைப் பிரிந்த —

**புனிதன்** (லியோ புனிதராஜ் - பாரதி ஒழுங்கை, மட்டக்களப்பு)

மணலாறில் முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய —

**கப்டன் நியூட்டன்** (அ. செபமாலை, முதலைக்குத்தி, மன்னார்)

**லெப். பிரதாப்** (சண்முகம் முரளி - செங்கலடி, மட்டக்களப்பு)

**2-ம்லெப். செல்வம்** (செ. சத்தியசீலன் - தாமரைக்குளம், அடம்பன், மன்னார்)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது படுகொலை செய்யப்பட்ட சித்தாண்டியைச் சேர்ந்த தமிழ் விவசாயி.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
[சி/4727]


## நன்றி நவிலல்

04-07-1992 அன்றுசென்னையில் காலமான திரு. கோவைமகேசனின் (மகேஸ்வரசர்மா) மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும், கடிதம் மூலம் அனுதாபச் செய்திகள்தந்தவர்கட்கும், அவரது நினைவாக எமது இல்லத்தில்நடைபெற்றமதியபோசனவைபவத்தில்கலந்து கொண்ட விடுதலைப் புலிகள் இயக்கப்பொறுப்பாளர்கள் உட்படமற்றும் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள்.

வீரபத்திரர்கோவில் (சகோதரன்)
கோப்பாய். (2856)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



# நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை அசோக்**

(கதிர்காமநாதன் ரகுநாதன்)

தாயின்மடியில் 9· 8· 1975 — தமிழீழ மண்ணிலே 1· 8· 1991

திதி 21· 7. 1991

அன்புச் செல்வமே எமதுயிரே அசோக்! விண்ணகம் தனை ஆளச் சென்று இன்றோடு ஓராண்டு ஓடி மறைந்ததடா. மறக்குமா உன்முகம் தமிழீழத்திலே சிறக்குதடா உனது வீரம். தலைவன் வழியிலே வீரநடை போட்டவனே உன் ஒரு வயதிலே அம்மாவையும் இழந்து பதின்ஆறு வயதிலே மண்ணையும் இழந்து விட்டவனே உன் வீரம் கண்டு உலகம் வியக்குதடா. அஞ்சா நெஞ்சுடன் அறப்போருக்கு உன்னை அர்ப்பணித்தாயடா. எதிரியோடு போராடி நொடிப்பொழுதில் மாவீரர் ஆனாயடா. ஆனால் அறப்பூமியிலே உன் நாமம் என்றும் நிலைக்குமடா அசோக் உனது ஆத்மா சாந்தியடைய விரைவில் மலரும் தமிழீழமடா

போராளிகள், நண்பர்கள் உறவினர்கள், அசோக்கின் ஓராண்டு நினைவு தினத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றாம். கொண்டாடும் இடம் முகமாலைச் சந்திக்கு அண்மையில்.

உனது பிரிவால் வாடும்
அண்ணாமார், அம்மம்மா,
அம்மப்பா, மாமாமார்,
அன்ரிமார், நண்பர்கள்·

...ங்கத்தார் வயல்,
...ச்சி.
...8)

# நெஞ்சை விட்டகலா நினைவலைகள்



கப்டன்
**செங்கதிர்**
[லுக்மன் வலிதியான் சின்னத்தம்பி, மறைக்காடு, குடத்தனை]



லெப்டினனட்
**சுடரொளி**
(தீபன் – குழந்தைவடிவேல், ரமேஸ் இரண்டாம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை)



2ஆம் லெப்டினனட்
**இந்திரன்**
(மயில்வாகனம் சந்திரன், முள்ளி வீதி, அரியாலை)



2ஆம் லெப்டினனட்
**நாவலன்**
(முனியாண்டி குமார், சிவபுரம் மல்லாவி, கிளிநொச்சி)

எங்களின் மண்ணில் எதிரியின் காலடி
எப்படிப் படிய விடுவது
சிங்களக் கூலிப் படைகளுக்கிங்கே
சீதனமோ இம் மண்ணென்று
வெங்களமாடி வீரச்சாவினை
ஏற்ற வீர மறவர்களே
உங்களின் உன்னத இலட்சியம் வென்றிட
உழைத்திடுவோம் என்றும் உறுதியுடன்

வடமராட்சி — நண்பர்கள்

[சி]4721

### சிந்தனைக்கு

உண்மை தனக்குத் தெரிந்த போது, அதை உரக்கக் கூவாதவன், பொய்யர்கள் போலிகளை உற்பத்தி செய்யும் மோசடிக்காரர்கள் ஆகியோருக்கு உடந்தையாகி விடுகிறான்.

— சார்ல்ஸ் பெகை


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21- 07- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## சுதந்திரக் கட்சி முதலில் தெளிவு பெறட்டும்

“ஐக்கிய தேசியக்கட்சியின் பதினைந்து வருட ஆட்சியின் பின்பும் வடக்கிலும் - கிழக்கிலும் இனப் போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஐக்கிய தேசியக்கட்சியினால், இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதனை வடக்கு-கிழக்கு மக்களுக்கு நான் எடுத்துரைக்கப் போகிறேன்” இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டார நாயக்கா தெரிவித்துள்ளார்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை ஐக்கிய தேசியகட்சி அரசாங்கம் தீர்த்து வைக்க முனைப்புடன் செயற்படவில்லை என்பதும், தொடர்ந்து போரை நடத்திச் செல்லவே விரும்புகின்றது என்பதும், தற்பொழுது தமிழ் மக்களுக்கு யாரும் சொல்லி விளங்கப்படுத்த வேண்டிய அவசியம் எதுவுமில்லை.

மேலும் திரு. அனுரா பண்டாரநாயக்கா குறிப்பிட்டது, போன்று தமிழர் தேசிய இனப்பிரச்சினையை தற்பொழுதுஆட்சியிலுள்ள ஐக்கியதேசிய கட்சி மட்டும்தான் தீர்த்து வைக்க விரும்பவில்லை/முடியவில்லை என்பதும் தவறானதாகும். தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை ‘இலங்கை சுதந்திரம்’ பெற்ற காலத்திற்கு முன்பிருந்தே படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று ஆயுதப் போராட்டமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இந்நிலையில் தேசிய இனப்பிரச்சினை தீர்வு காணப்படாமைக்கு இன்றுள்ள அரசியல் தலைவர்களை மட்டும் குறை சொல்வது போருந்தாது கடந்த காலத்தில் ஆட்சி செய்த சிங்களத் தலைவர்களும் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

இதில், திரு. அநுரா பண்டார நாயக்காவின் தகப்பனார் எஸ். டபிள்யூ. ஆர். டி, பண்டார நாயக்கா, தாயார் திருமதி சிறிமவோ பண்டார நாயக்கா ஆகியோரும் அடங்குவர். ‘ஒரு மொழி இருநாடு, இருமொழி ஒருநாடு’ என எச்சரிக்கை செய்யப்பட்ட போதும், திரு.எஸ் டபிள்யூ. ஆர்,டி. பண்டார நாயக்கா தனிச் சிங்கள மொழிச் சட்டத்

# பொருளாதாரத்தடை; முற்றுகை; கடும்தாக்குதல்
# புலிகளைத் தோற்கடித்துவிடக் கூடியவையல்ல

## இந்தியாவும், இதில் தோல்வியே கண்டது

அண்மையில் மட்டக்களப்பு-கல்முனை வீதியிலுள்ள கரையோரகிராமமாகியகோட்டைக்கல்லாறைச் சேர்ந்த ஒருவரை சந்தித்தேன்.

சிறிது காலத்திக்கு முன் அப்பிரதேசத்திலிருந்து இராணுவத்தினர் வெளியேறிய அவ்விடத்தை விசேட அதிரடிப்படையினர் பொறுப்பேற்றிருந்தனர். விசேட அதிரடிப் படையினர் மக்களுடன் பழக ஆரம்பித்து உள்ளனர்என்றும் அங்கு வசிக்கும் மக்களில் ஒரு சிலர்தான் சிங்களம் பேசவோ விளங்கும் நிலையிலோ உள்ளனர். என்றும் அவர் கூறினார். ஆனால் அவர்கள் அங்குள்ள சுவர்களை இடித்தும் பயன் தரும் தென்னை மரங்களை வெட்டியும் தடைகளையும் காவலரண்களையும் அமைக்க பயன்படுத்துகின்றனர். அத்தோடு பக்கத்திலுள்ள சதுப்புக்குடாவின் ஓரங்கவில்வளரும்‘தில்லை’ என்னும் நச்சுத்தாவரங்களை அகற்ற மக்களைப்பிடித்துச் செல்கின்றனர் என்றும் குறைபட்டுக் கொண்டார்.

அப்போ இங்கு புலிகள் அப்புறப்படுத்தப்பட்டு விட்டார்களா? என்று நான் அவரைக் கேட்டேன். அவர்இது என்ன குழந்தைத் தனமான-சிறுபிள்ளைத்தனமான கேள்வி என்பது போல ஆச்சரியத்துடன் என்னைப் பார்த்துவிட்டு புலிகள் எவ்வாறு அப்பகுதி மக்களின் அன்றாட வாழ்வில் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்பதுபற்றி என்னிடம் விபரமாக விளக்கினார். இறுதியாக அவர் கூறினார் ‘அவர்கள் திரும்பவும் வருவார்கள்’

அதாவது பிரச்சினை இதுதான் இப்பகுதிக்குப் புலிகள் திரும்பவும் வருவார்கள். இந்திய இராணுவத்துடனான போரின் பின்னர் புலிகள் புத்துயிர் பெற்ற நிகழ்ச்சியையே எனது கோட்டைக்கல்லாறு அனுபவமும் பொதுவாக எதிரொலித்தது.

பொதுமக்களுடன் தொடர்புடைய யுத்தமொன்றில் பாரம்பரியமாக இருந்து வரும் தன்மையையும் இது எடுத்துக் காட்டுகின்றது. அதாவது நிர்ப்பந்தத்தைப் பிரயோகிக்கின்ற அதேசமயம் நட்பையும் வளர்க்க வேண்டியிருக்கின்றது. இதுதான் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக இராணுவம் வகுக்கும் திட்டத்தின் முக்கிய அம்சமாகவும் இருக்கின்றது.

இந்த மனோபாவமானது இராணுவ உயர் மட்டத்தினரிடையே ‘‘றியல் எஸ்டேட்’’ அமைப்பை உருவாக்கும் ஆர்வத்தைத் தூண்டியுள்ளதுடன் யாழ்ப்பாணத்திற்கான சகல பாதைகளையும் மூடி, குடாநாட்டைத் தனிமைப் படுத்தும் திட்டத்தையும் வகுக்க வைத்துள்ளது. இது 1987-89 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டை பிரதான நிலப்பரப்பிலிருந்து துண்டித்த இந்திய இராணுவம் புலிகளை முற்றாக அப்புறப்படுத்தி விட்டதாக சொன்னதற்கு ஒப்பானதாகும். ஆனால் புலிகள் மீண்டும் வந்ததை அவர்கள் கண்டனர்.

யாழ். குடாநாட்டிற்கும் பெருநிலப்பரப்பிற்கும் இடையேயுள்ள தொடர்பை முற்றாகத் துண்டிப்பதன்மூலம் இரண்டு விடையங்கள் சாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்று பெருமெடுப்பிலான இராணுவ நடவடிக்கையை யாழ்.குடாநாட்டில் எடுக்கும் போது புலிகளுக்கு உதவிகள் எதுவும் கிடைக்காமல் செய்வது. இரண்டு பொதுமக்களின் மன உறுதியை சிதைத்து எதிரியின் இலட்சியத்தையும் உறுதியையும்சிதைப்பது. இதுநவீனஇராணுவகொள்கை வகுப்பாளராகிய யூலியே டோஹெற் (Giulio Douhet) என்பவரின் கூற்றுப்படி பெரும் தொகையான மக்கள் வாழும் பகுதிக்குள் தீவிரவாதிகள் முடக்கி வைத்தல் அல்லது பொருள்கள் சேவைகள் என்பனவற்றிற்கு பெருமளவு தட்டுப்பாடு நிலவும் நிலையை ஏற்படுத்தல்.

### தராக்கி

இராணுவ நடவடிக்கைகளின் போது பொதுமக்களுக்கு ஏற்படும் பொருளாதார அழிவுகள் யுத்த முனையிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பக் கூடியது என ஆய்வுகள் காட்டுகின்றன.

யாழ். குடா நாடு மின்சாரம், எரிபொருள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் எதுவுமற்ற நிலையில் யுத்தம் தொடங்கிய காலம் தொட்டு இருப்பதால் அதன் வழமையான கட்டமைப்பு பாதிக்கப்பட்டுள்ளதுடன் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

பாக்குநீரிணையைக் கடந்து அகதிகள் கூடதமிழ்நாட்டிற்கு வருவதை ஜெயலலிதா விரும்பவில்லை. இதற்காக சிறிலங்கா கடற்படை தளபதியுடன் சிநேகபூர்வமான பேச்சுக்களை கூட அவர் நடத்தியுள்ளார். எனவே இது யாழ்ப்பாணத்தில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையை இராணுவம் எடுக்கும்போது மக்கள் முற்று முழுதாக அடைக்கப்பட்ட ஒரு நிலையில் இருக்கப்போகிறார்கள் என்பதை காட்டுகிறது.(கிளாலிப்பாதை விதிவிலக்கு)

யாழ்.குடா நாட்டை கைப்பற்றுவதற்கு முன் இந்தியாவும் இதையேதான் செய்தது. இந்திய இராணுவத்தரப்பின் 1987 நவம்பர் 1ஆம் திகதி செய்தியின்படி இந்திய இராணுவத்தின் நோக்கம் யாழ். குடாநாட்டை பெருநிலப்பரப்பிலிருந்து பிரித்து ஒரு பாதுகாப்பு வளையத்தினுள் வைத்திருப்பதாக இருந்தது.

முகமாலையில் கண்டி வீதியில் (இயக்கச்சிக்கு அண்மையில்) அமைக்கப்பட்ட புதிய முகாம் வடகிழக்கு பகுதியிலுள்ள சுண்டுக்குளம் ஊடாக யாழ். குடாநாட்டிற்குள் வருவதை தடுப்பதற்காக அமைக்கப்பட்டது.

வடமேற்குப் பகுதியில் சங்குப்பிட்டி - கேரதீவு பகுதியூடாக வருவதைத் தடுக்க கேரதீவு, சங்குப்பிட்டி, பூநகரி ஆகிய இடங்களில் இந்திய இராணுவம் மூன்று புதிய முகாம்களை அமைத்தது. அத்துடன் ஆனையிறவு ஊடான பாதையும் இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

இந்திய இராணுவத்தின் முற்றுகை கடும் நடவடிக்கை என்பன கூட குடாநாட்டு மக்களையும், புலிகளையும் பிரிப்பதில் தோல்வியை அடைந்தன எனத் திபேந்திர சிங், சர்தேஸ் பாண்டே ஆகியோரின் கூற்றுக்களிலிருந்து தெரிய வருகிறது.

ஆனால் இந்திய இராணுவத்தால் தனது படைகளையும், ஏனைய குழுக்களையு விரைவில் குடாநாட்டிற்கு அனுப்ப முடிந்தது.

இவ்வாறு ஒருபகுதி மக்களை வெளித் தொடர்பு எதுவுமின்றி நீண்ட நாட்களுக்குத் தடுத்துவைப்பது என்பதுஎதிர்மறையான விளைவை ஏற்படுத்தும் என இந்திய தரப்பு உணர்ந்துகொண்டிருந்தது.

ஏனெனில் முதலாவதாக மக்கள் அரசியல் காரணிகளினால் புலிகளின் அரசியல், இராணுவ இலட்சியங்களை நோக்கி வலிந்து தள்ளப்படுவார்கள்.

இரண்டாவதாக புலிகள் ஓர் அமைப்பு ரீதியாக உள்ளமையால் தனது வெளிப் பொருளாதார பலத்தினாலும், வர்த்தக பொருளாதார முயற்சிகளாலும் (கப்பற் தொழில், பங்குச் சந்தை வியாபாரம், பட விநியோகம் (உ+ம் ‘தளபதி’ படத்தின் வடஅமெரிக்க விநியோகம்), நிதிச் சேவைகள் போன்றவற்றின் மூலம்) நீண்ட காலம் நிலைத்து நிற்கக் கூடியது.

மூன்றாவதாக இத்தகையதான பொதுமக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் நீண்ட காலம் தொடர்வது என்பது அரசை ஆதரிக்கும் தமிழ்க் குழுக்களை கடினமான நிலைக்கு இட்டுச் சென்று விடும். இப்போதே அவர்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து மகிழ்ச்சிகரமாக இல்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

கோட்டைக்கல்லாறாக இருந்தாலென்ன யாழ்ப்பாணமாக இருந்தாலென்ன மக்களுடன் தொடர்புடைய இவ்வாறான தந்திரோபாயம் மக்கள் - புலிகள் உறவு நெருக்கமாக இருக்கும்வரை சாத்தியப்படப் போவதில்லை.

### சிறிலங்கா கடற்படையால் பாதிக்கப்பட்ட
## தமிழக மீனவர்கள் மறுவாழ்விற்கு பாக் ஜலசந்தி மறுவாழ்வுத் திட்டம்

(சென்னை)

சிறிலங்கா கடற்படையின்

கென பாக்-ஜலசந்தி மீனவர் மறுவாழ்வுத் திட்டமொன்றை

திட்டமிடப்பட்டுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

### பாகிஸ்தான்

பாகிஸ்தான் சென்றிருந்தார் என்று ‘பயணியர்’ என்ற இந்திய செய்திப் பத்திரிகையில் வெளிவந்த செய்தியை கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் முற்றாக மறுத்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

### மேஜர்

## வணிக நாதம் வெளியீடு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வர்த்தக மாணவ மன்றத்தினரின் ‘‘வணிக நாதம்’’ சஞ்சிகை இன்றுவெளியிடப்படவுள்ளது கல்லூரி மண்டபத்தில் காலை 9-30 மணியளவில் செல்வன் இ. விஜய

செய்யப்பட்ட போதும், திரு. எஸ் டபிள்யூ. ஆர்.டி. பண்டார நாயக்கா தனிச் சிங்கள மொழிச் சட்டத்தைக் கொண்டு வந்தார். 1972 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டார நாயக்கா ஆட்சி காலத்தில் அறிமுகப்படுத்திய புதிய அரசியலமைப்பு சட்டத்தினால், தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கே அச்சுறுத்தால் ஏற்பட்டது.

இந்நிலையில், திரு. அனுரா பண்டாரநாயக்கா இனப்பிரச்சினை தீர்க்கப்படாமைக்கு திரு பிரேமதாசாவின் தலையில் மட்டும் பாரத்தைப் போட்டு விட்டு தப்பித்துக் கொள்ள முடியாது. மேலும், தற்பொழுது கூட, வடக்கு — கிழக்கு இணைப்பை சிறிலங்கா சுதந்திரக்கட்சி எதிர்க்கின்றது, தமிழரின் உரிமைகளை அங்கீகரிக்க மறுக்கின்றது. இந்நிலையில் திரு. அனுரா பண்டராநாயக்கா தமிழ் மக்களுக்கு ஆட்சியிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காணாது என எடுத்துரைப்பதால் பலனேதும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. ஏனெனில், இன்றும், தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக தமிழ் மக்களின் பார்வையில் ஐக்கிய தேசிய கட்சியும் சரி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சரி ஒன்றாகவே உள்ளது.

இந்நிலையில் திரு. அனுராபண்டார நாயக்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் ஆட்சியில்உள்ள குறைகளை தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறுவதை நிறுத்திவிட்டு, சுமார் நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக நீடித்து வரும் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை முதலில் விளங்கிக் கொள்ள முற்படட்டும் பின்னர், அதற்குரியதீர்வை வெளிப்படுத்தட்டும். அதாவது, தமிழர் பிரச்சினை தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாட்டில் இருந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி எந்தளவு மாறுபடுகின்றது என்பதை முதலில் கூறட்டும்.

இதன் பின்னரே தமிழ்மக்கள் திரு. அனுரா பண்டார நாயக்கா கூறுவதை கேட்கலாமா? விடலாமா? என்பதைத் தீர்மானிக்க முடியும். அதை விடுத்து, பிரேமதாசா அரசாங்கத்தின் தவறுகளைக் விளக்கிக் கூறுவதால் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லை. தமிழர் பிரச்சினைக்கு அது தீர்வுமல்ல. தமிழ் மக்களைப் பொறுத்து சிறிலங்காவை பிரேமதாசா ஆண்டலென்ன? அனுரா பண்டார நாயக்கா ஆண்டாலென்ன? வேறுயார் தான் ஆண்டாலென்ன? தமிழரின் உரிமையை அங்கீகரித்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண முற்படுபவர்களின் பேச்சை மட்டுமே தமிழ்மக்கள் கேட்கத் தயாராகவுள்ளனர். இதுவே நிதர்சனம்.

---

சிறிலங்கா கடற்படையின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்

மறுவாழ்வுத் திட்டமொன்றை மாநிலத்தில் ஐந்து கடலோர மாவட்டங்களில் அமுல்படுத்த

# க. பொ. த. (உ/த) பரீட்சை அனுமதிஅட்டை விநியோகம்

(யாழப்பாணம்)

க. பொ. த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளினதும் அனுமதி அட்டைகள் இன்று முதல் விநியோகிக்கப்படுகின்றது.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும் தங்கள் கோட்டங்களில் பெற்று மாணவர்களுக்கு விநியோகிக்குமாறும், தீவகம் தவிர்ந்த ஏனைய இடங்களைச் சேர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தீவுப்பகுதிப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை யாழ். கல்வித் திணைக்களத்திலும் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

(பட) (05)

---

விக்கப்பட்டுள்ளது.

மாநில மீன் வளத்துறை அமைச்சர் டி. ஜெயக்குமார் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போது இதனைத் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட மீனவர்கள் இறால் மீன் பண்ணையை அமைத்துக்கொள்ள உதவியாக ஒவ்வொருவருக்கும் அரை ஏக்கர் நிலமும் பண்ணை அமைத்துக் கொள்வதற்கான அடிப்படை வசதிகளும் அளிக்கப்படும் என்றும்,

முதற்கட்டமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏழரைக் கோடி ரூபாய் செலவில்செயற்படுத்தப்படும் என்றும்,

இதன் மூலம் ஆயிரம் மீனவர்கள் பயன்பெறுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

---

## மேஜர்

மூன்றாம் இடத்தை வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரிக் குழு பெற்றுக் கொண்டது.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியைச்சேர்ந்த இ.முகுந்தன் என்ற மாணவனே மாவட்ட ரீதியில் அதிகூடிய புள்ளியைப் பெற்றுள்ளார்.

---

## செப்டெம்பர்

என எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ சீப் ஒவ் ஸ்டாக்ஆக பதவியேற்பதற்கு வசதியாக வருட இறுதிவரை இராணுவத் தாக்குதல்கள் தொடரக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

---

காலை 9-30 மணியளவில் செல்வன் இ. விஜயகுமார் தலைமையில் நடைபெற இருக்கும் இவ் விழாவில் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. சிவராசா, நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் ஆகியோர் உட்பட பலபிரமுகர்கள்கலந்து கொள்வார்கள்.

---

## ரூபாவின்

காலப் பகுதியில் தேயிலை உற்பத்தி 15.6 மில்லியன் கிலோவினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அத்துடன் பெரும்போக வேளாண்மையில் 7.7 சதவீத வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது.

அரசின் ஆதரவிலான கொள்கை ஆய்வு நிறுவனத்தின் அறிக்கை ஒன்றில மேற்படி விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## கட்டாய

எனது மனைவியோடு சேர்ந்து கொள்ளும்படியும் கூறினர். அரசாங்க உயர் மட்டத்தவர் ஒருவரின் ஆலோசனைப்படியே தான் இவ்விதம் கூறுவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். அதேவேளை சில பொலிஸ் உயர் அதிகாரிகள் காமினி திசநாயக்காவுடன் சம்பந்தப்பட்ட பேராசிரியர் ராவ்ப் புல்ஜன்ஸ் கடத்தல் வழக்கில் முக்கிய சாட்சியான வில்பிரட் முதலாளியை நான் மிரட்டியதாக ஜனாதிபதிக்கு தகவல் கொடுத்தனர். இதன் பின்னர் தான் எனது கடவுச்சீட்டு பறிமுதல் செய்யப்பட்டது. அமெரிக்காவிலுள்ளசிறிலங்கா தூதுவரகத்தில் கடமையாற்றும் எனது மனைவி பதவி நீக்கம் செய்யப்பட்டதுடன் அவர் வசித்த வீட்டிலிருந்தும் வெளியேற்றப்பட்டார். இந்த நேரத்தில் தான்சட்டத்தரணி லியனாராய்ச்சி வழக்குஎனக்கு எதிராக தொடுக்கப்பட்டது என்றும் தெரிவித்தார்,

சுதந்திரமான விசாரணைக் கமிஷன் ஒன்றின் முன்பாக தோன்றி சாட்சியமளிக்கவும், தான் தெரிவிக்கும் குற்றச் சாட்டுக்களை நிருபிக்கவும் தயாராக இருப்பதாக கூறும் முன்னாள் டி. ஐ. ஜி. உடுகம் பொல பொலிசாரோ அரசாங்கமோ இயலுமெனின் தம்மைக் கைது செய்யட்டும் பார்க்கலாம் எனச் சவாலும் விடுத்தார்.

---

## நெருப்பு

இ. முருகையன், காரை சுந்தரம்பிள்ளை ஆகியோர் நிகழ்த்த சிற்பி, புதுவை இரத்தின துரை ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர். பதிலுரையை மு. வே. யோ. வாஞ்சிநாதன் வழங்குவார் இதனைத் தொடர்ந்து சின்னமணி குழுவினரின் ''போர்முனையில் நெருப்பு மழை'' என்ற வில்லிசை நிகழ்ச்சியும்இடம்பெறவுள்ளது

---

## நிவாரணம்

பொழுது தங்களுக்கு இன்னமும் அனுமதி வரவில்லை என சங்கக்கிளைகள் தரப்பில்தெரிவிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து மக்கள் ஏமாற்றத்துடன்வீடுதிரும்பினர்

---

## யுத்தத்தில்

விலை 3 கோடியே 400 இலட்சம் அமெரிக்க டாலராகும். அதாவது இலங்கை நாணயப்படி சுமார் 123 கோடியாகும்.

---

## சிறிலங்கா

தாராளமனப்பான்மையில்லாத குறைந்தளவிலான சம்பளக் கொள்கை, வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் அரச நிறுவனங்களும், சபைகளுக்கும் வழங்கும் நிதியைக் குறைத்தல் மனிதநேயப் பணிகளுக்கு நிதி உதவும்போது உரிய அளவு தொகையை ஒதுக்குதல் போன்ற உறுதியான நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று லண்டன் எக்களாமிக்ஸ் கருத்துத் தெரிவித்துள்ளது. மேலும் பாதுகாப்புச் செலவினங்களைச் சிறிலங்கா அரசு குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அது எச்சரித்துள்ளது.

இதேவேளை, சிக்கனத்தையும் யுத்தத்தையும் ஒரேநேரத்தில் மேற்கெள்ள முடியாது உள்நாட்டு யுத்தத்துக்கு சிறிலங்கா அரசு கொடுக்கும் வெகுமானம் பணவீக்கமாகும் என்று ஆசிய விவகார ஆய்வுச் சங்கத்தில் கடந்த ஏப்பிரல் மாதம் உரையாற்றும்போது பேராசிரியர் மார்சல்சிங்கர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். ஒவ்வொரு வருடமும் சிறிலங்காவுக்குக் கோடிக் கணக்கில் நிதி வழங்கும் நாடுகள் சிறிலங்காவில் காணப்படும் இந்நிலையினால் தமது பொறுமையைஇழந்துவிட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

---

## தலைவர்

வொரு நகரிலும்நடத்தப்படும் என்றும் கூறினார்.

திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது, ராஜீவ் காந்தியின் கொலைக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு என்ற ஊகத்தைத் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஏற்படுத்தி, புலிகளைத் தடை செய்யும்படி மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுத்தற்காக குற்றம் சாட்டினார்.

ஸ்தானிகராலயத்திற்கு முன்னால் உரை நிகழ்த்திய ஒவ்வொரு பேச்சாளரும் சிறிலங்கா அரசு தமிழ் மாகாணங்களின்மேல் நடத்திவரும் தாக்குதல் நடவடிக்கையை நிறுத்துமாறு குரல் எழுப்பினார்கள்.

ஒரு மணிநேரம் சிறிலங்கா துணை ஸ்தானிகராலயத்துக்குமுன்னால்நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின் கலைந்து சென்று நகரில் இன்னோர் பகுதியில் கண்டனக் கூட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

---

## படையில்

கௌடில்யா கேள்வி எழுப்புகிறார். இவ்வளவுபேர் - 4,000 சிப்பாய்கள் ஏன் இராணுவத்தை விட்டு ஓடவேண்டும்? என்கிறார் அவர்.

இராணுவத்தில் புதிதாகச் சேர்த்துக்கொள்பவர்களுக்குச் சம்பளம்வழங்கப் பணம் இருக்குமானால் இராணுவத்தை விட்டு ஓடியவர்களை மீண்டும் சேர்த்துக்கொள்வது இராணுவத்திற்கு அவமானமாகும். மேலும் இராணுவத்தில் புதிதாகச்சேர்பவர்களும் கொழும்பில் அல்லது தென்னிலங்கையில் கடமைசெய்யத்தான் விரும்புகிறார்கள். பொலநறுவைக்கு வடக்கே சென்று கடமையில் ஈடுபட ஒருவரும் விரும்புகிறார்களில்லை என்றும்—

சில சிப்பாய்கள் சுகவீனம் என்று படுத்துவிடுகிறார்கள் தெரிந்த பாராளுமன்ற உறுப்பினர்களைக்கொண்டு அம்மா மரணப்படுக்கையில், வடக்கே போக முடியாது என்று சாக்குச்சொல்கிறார்கள். இந்நிலையில் நீங்கள் மனித வலுப்பக்கம் கவனம் செலுத்துகிறீர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஈழநாதம்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 18 | 21 |
| 03 | 07 |
| 1970 | 1991 |

### லெப்டினன்ட் கருணா
(நடராசா - குகேந்திரன் (பவான்))


21 - 07 - 1991 அன்று கட்டைக்காட்டு சமரில் வீரச் சாவைத் தழுவிக் கொண்டார். இப்போரில் அன்று வீரச்சாவடைந்த சகபோராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தி நிற்கின்றோம்.

''ஓ வீரனே எங்கள் மண்ணில் உன் பெயர் எழுதி வைக்கப்படும் நீ மடியவில்லையடா உன் கதை முடியவில்லையடா ஓ வீரனே ........................

கற்சிலைமடு,
ஒட்டுசுட்டான்.

குடும்பத்தினர், நண்பர்கள்.
(சி/ 4719)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
16· 11· 1969

வீரச்சாவு
27· 07. 1991

### மேஜர் சேரன்
(சண்முகம் றே·ய் செழியன்) (கொழும்பு)

விடுதலை வேண்டி நிற்கும் தமிழினத்தின்
விடியலின் பூபாளத்தின் வேளைக்காயிங்கு

## ஓராண்டு நினைவு அஞ்சலி



### தில்லைநாதன் முரளீதரன்
(வீரவேங்கை லோலோ சீலன் சிறப்புப் படையணி)

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 22-12-74 | 21-7-91 |

முரளீ முரளீ என்று தரணி யெல்லாம் தேடுகின்றோமடா
ஓராண்டு காலமாய் எங்கே நீ சென்றாயோடா
கயவரின் குண்டு உன் கன்னத்தை முத்தமிட்டு
உன்னை கல்லறையில் உறங்க வைத்ததோடா
கல்லறையில் நீ உறங்கிக் காணுகின்ற கனவெல்லாம்
தமிழீழத் தாயகமே!

நாளை 22- 7- 92 அன்று ஏழாலையில் உள்ள இவரது இல்லத்தில் நிகழவிருக்கும் நினைவஞ்சலி நிகழ்வுகளில் அனைத்துப் போராளிகளையும் மற்றும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறுவேண்டுகின்றோம்.

ஏழாலை கிழக்கு

இங்ஙனம்
—குடும்பத்தினர்
(சி/4733)

## ஓராண்டு நினைவு

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
12 - 03 - 1973

தாயக மண்ணில்
21 - 07 - 1991

### வீரவேங்கை வரன்
(சரவணமுத்து - ரவிச்சந்திரன்)

திதி: 06· 08. 1992

கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்தினார்

தமிழ் மண்ணை மீட்டெடுக்க
உன் உயிரையே அர்ப்பணித்தாய்
தமிழீழம் மலர்ந்திடவே
தன்மானம் காக்கப் புறப்பட்டாய்
கட்டைக்காட்டினிலே சமர்புரிந்த - வீரனே
சரித்திரமாகி விட்டாய் தமிழ் மகனே.
நிலத்தையே அந்நியன் அழிக்க வந்தபோது
அவன் குலத்தையே அழிக்கப் புறப்பட்ட கோமகனே
என்றும் உன்பணி நாம் தொடர்வோம்.
வாழ்க தமிழீழம்

42, மானிப்பாய் வீதி
கோணாந்தோட்டம்
யாழ்ப்பாணம்.

என்றும் உன்பிரிவால் வாடும்
தாய், சகோதரங்கள், மற்றும்
உற்றார், உறவினர்கள்
(2824)

## 45 - ம் நாள் நினைவஞ்சலி




| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 27 | 07 |
| 07 | 06 |
| 1971 | 1992 |

### 2 - ம் லெப். பல்லவி
(பாலசுப்பிரமணியம் பானுமதி (வவா))

பாடும் குயிலே உன் பாட்டு எங்கே
ஆடும் மயிலே உன் ஆட்டம் எங்கே
பாயும் புலியே உன் வீரம் எங்கே
பாதை மாறிப் போனது எங்கே
பல்லவி உனது வீரம் எங்கே.
அன்று திலீபன் அண்ணாவுக்கு
பாடல்கள் எழுதி இன்று உனது
வாழ்விலும் பல்லவி எழுதி விட்டாயோ பானுமதி.

## ஓராண்டாகியது....



### மேஜர் கோணேஸ்
(தாமோதரம்பிள்ளை மார்க்கண்டு, புத்தூர்)

| வீர ஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 16-05-1970 | 27-07-1991 |

இவன்,
கட்டைக்காட்டினிலே
காவியம் ஆகியவன்
செத்து மடியும் வரை
போர்க்கள மாடியவன்
வலிமைமிகு புலிவீரர்க்கு — நெஞ்சில்
வீரமுடன் விவேகத்தை ஊட்டியவன்
பாசமிகு நண்பர்களுடன் — நீண்டதோர்
பிரிவை உண்டாக்கி
மானமிகு தமிழிற்காய் — இவனும்
மாவீரன் படை சென்றான்.

சக போராளிகள், நண்பர்கள்.
புத்தூர் மேற்கு. (2854)

## ஓராண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில் | ஈழவர் மண்ணில் |
|---|---|
| 05 | 21 |
| 07 | 07 |

தன்மானத்துடன் சமர்க்களத்திலே புகுந்து விளையாடியவனே
தன்னுடலில் ஆனையிறவுமண் உன் பெயரை
பொறித்துக்கொண்டது.

சாவகச்சேரி.

-நண்பர்கள்

(2848)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



| வீர உதயம் | வீரச்சாவு |
|---|---|
| 16 — 02 — 1974 | 21 — 07 — 1991 |

### கப்டன் பில்லா

(வே. கிருஸ்ணபிள்ளை சிவஞானம்
-உடுத்துறை தாளையடி)

சொந்த மண்ணில் பிறருக் கடிமை
செய்து வாழ்தல் தகுமோ என்று
நொந்து கிடந்து உடலைச் சுமந்து
நொடிப் பொழுதேனும் வாழேன் என்று
பொங்கி எழுந்து போர் கோலம் பூண்ட
புனித வீரநெஞ்சினனே!
கங்குல் அகன்றொரு காலை பிறந்திட
என்றும் உழைத்த உத்தமனே!
உந்தன் பாதச் சுவட்டின் பின்னே
பயணித்த உன் அன்பு சகோதரனோடு
எங்கள் பயணம் என்றும் தொடரும்
எங்கள் இலட்சியம் வென்றே தீரும்.

வடமராட்சி.

உன் அன்பு நண்பர்கள்

(சி/4720)

---

## அஞ்சலி



2ஆம் லெப்டினன்ட்
**எடிசன்**
முருகு - குமார்
திருக்கோணமலை
சாம்பல்தீவு

### திதி 21-07-92

வீர உதயம்:- 18-06-1970
வீரச்சாவு:- 21-07-1991

மண்மீட்புப் பணிக்குச்
சென்ற
அண்ணனின் வழியே
சென்றாய்
நாமமும் எடிசன் ஆனாய்
வீறுடன் பணி தொடர்
ந்தாய்
கட்டைக்காடு போரிலே
களம் குதித்தாய்-மீண்டும்
வருவாய் என நாமிருக்க
கொடியவர்கள் ஏவி விட்ட
குண்டுக்கிரை ஆனாயே!
மீண்டும் இவ்வுலகிற்கு
வருவாய் - என
காத்திருப்போம் கண்விழி
மூடாமல் - உன்னை
பார்த்திருப்போம்

திருக்கோணமலைத்
தொடர்பகம்
கொக்குவில். [சி/4732]

---

07 - 06 - 1992 அன்று உம்முடன் சேர்ந்து பாதைமாறி
வீரச்சாவு அடைந்த சகவீரவேங்கைகளுக்கும்
எமது வீரஅஞ்சலி.

குடும்பத்தினர்.


வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை.

காரைநகர்.

( 2842 )

---

## 1-ம் ஆண்டுநினைவலைகள்



| வீரப் பிறப்பு | வீரச் சாவு |
|---|---|
| 16 — 11 — 1969 | 21 — 07 — 1991 |

### மேஜர் சேரன்


(சண்முகம் றோய் செழியன்)

எண்பத்தைந்துகளில் கோணமலையில் இருந்து
யாழ்பாடி நாட்டிற்கு வருகின்ற ஒரு அரச பேருந்து,
சாவகச்சேரி தன்னில் தரித்து நிற்கிறது, பதினைந்து
பதினாறு, பதினேழு இருக்கும் வயதுகளில் மூன்று
பாடசாலை மாணவர்கள்,
அவர்கள் தேடி வந்தது புலிகளின் பாசறையை
புதிய புலிகள்-பயிற்சி முகாம்-பயிற்சி ஆசிரியர்
செல்வராஜா மாஸ்ரர்
பயிற்சிகள் முடிவடைந்து களத்துக்கு தயாராகும்
புலிகள் அந்த மூவரில் ஒருவன் தான்
எங்கள் சேரன் ...
வோக்கியில் அவன் ''சப்சப்....றேகா'' என்று
அழைக்கும் அந்தப் பாங்கினை
நாம் கேலி செய்யாத நாட்களே இல்லை
அவனுடன் பழகிய அந்த நாட்களை எம்
நெஞ்சங்கள் ஒரு போதும் மறக்காது.

(சி/4731)

-நண்பர்கள்

---



| 1976 | 1991 |
|---|---|

### வீரவேங்கை நேரு

(சாம்பமூர்த்தி குமரேசன்)
(சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு)

**திதி: 07 - 08 - 1992**

எம்மக்கள் விடிவுக்காய்
எம்மண்ணில் வரலாறுபடைக்கவென்று
எம்மை விட்டு பாலகனாய் கட்டைக்காடதனில்
எதிரியின் குண்டதனை நெஞ்சிலேந்தி
எமகளத்தில் பலியாகினீரே!
எமைவிட்டு ஓராண்டு சென்றிடினும்
எம்மனதில் வேதனையைத் தருகுதடா

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய போராளிகளையும் இந்நாளில் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகிறோம்.

சிவன்கோவில் வீதி,
புத்தூர். மேற்கு,
புத்தூர்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, தம்பிமார்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்,
சகபோராளிகள்.

(2855)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**20. 07. 1992**

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்:- 4942

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
41-9327, 26-6361, 41-9652, 27-5682, 21-6336, 26-763, 27-1187, 28-1984, 25-1664, 25-3240, 25-9869, 36-4148,

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
41-9995, 42-2383, 42-7975, 26-4045, 24-4707, 26-535, 26-7286, 42-1293, 41-7563, 24-6439, 28-8444, 42-5080,

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.